20.11.2025

O.S.No. 363/2019

DW1– கருப்பையா – த/பெ.முப்புலி

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 20.11.2025

இ.ம.எண்கள். 7/25, 8/25 அனுமதிக்கப்பட்டு அதன் அடிப்படையில் பி.வா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு அவர் மூலம் கூடுதல் வாக்குமூலமும், கூடுதல் உறுதிக்கூற்றும் கீழ்க்கண்ட ஆவணங்கள் குறியீட செய்யப்படுகிறது.

**முதல்விசாரணை தொடர்ச்சி**

1ம் பிரதிவாதி பெயரில் உள்ள சிறு குறு விவசாயி சான்றிதழ் கணினி நகல் பி.வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

1ம் பிரதிவாதி பெயரில் உள்ள 10(1) அடங்கல் கணினி வழி பதிவிறக்கம் செய்யப்பட்டது பி.வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

1ம் பிரதிவாதி பெயரில் உள்ள பசலிகள் அசல் பி.வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

சர்வே எண்.113/8Bக்கான பட்டா கணினி வழி பதிவிறக்க நகல் பி.வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

<u>குறுக்கு விசாரணை :</u> ( வாதி தரப்பில்)

1. பிராது தபசில்சொத்து எனதுதந்தையின் சுயார்ஜித சொத்து என்றால் சரிதான். தற்போது சாட்சிதனது தாத்தாவின் பங்குக்குகிடைத்த சொத்து என கூறினார். எனதுதந்தை 2008ம் ஆண்டு இறந்தார். என் தாயும் 2018ம் ஆண்டு இறந்துவிட்டார். எனதுதந்தை எனக்கு தபசில் சொத்துக்கள் சம்பந்தமாக எந்த ஆவணமும் எழுதிவைக்கவில்லை என்றால் சரிதான்.

2. வா.சா.ஆ.1 ஆவணம் எனது சகோதர, சகோதரிகள், தாயார் எனக்கு எழுதிவைத்த ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணம் 2ம் பிரதிவாதி முருகேசனுக்கு நான், எனது சகோதர, சகோதரிகள், தாயார் எழுதிவைத்த விடுதலை ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்திலே சர்வே எண்.113/17B என்ற சொத்தானது 3ம் அயிட்ட சொத்தாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனக்கு எழுதிகொடுத்த வா.சா.ஆ.1 ஆவணத்தில் அதே புல எண் உள்ளது என்றால் சரிதான்.

3. வா.சா.ஆ.1,2 ஆவணங்களை பொறுத்து எனதுதாய் உயிருடன் இருந்த காலத்தில் எந்த சீர்திருத்தமும் செய்யவில்லை என்றால் சரிதான். எனது சகோதரர் வா.சா.ஆ.8 ஆவணம் மூலம் அடமானம் ஏற்படுத்திக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி அடமான ஆவணத்தை நானும், எனது சகோதரரும் செல்லடித்துக்கொடுத்தோம் என்றால் சரிதான். வா.சா.ஆ.8 ஆவணத்தை நான் படித்துப்பார்த்ததில்லை, செல்லடித்துக்கொடுக்கும்போது படிக்கவில்லை. நான் ஆவணங்களை பார்த்துவிட்டு, தற்போது படித்துப்பார்க்கவில்லை என பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

4. செல்லடித்துகொடுத்த 6 மாதகாலத்தில் 2ம் பிரதிவாதி, வாதிக்கு விற்பனை செய்துவிட்டார் என்றால் சரியல்ல. அவர் விற்பனை செய்யவில்லை என்றவிவரம் 1 ½ வருடம் கழித்துதான் தெரியும். வாதி என் மீதும், நான் அவர்மீதும் குற்றாலம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தோம் என்றால் சரிதான். மேற்படி புகாரானது புல எண்.113/17B நீர் பாய்ச்சுவது சம்பந்தமான புகார். அதற்குபின்பு 2018ம் ஆண்டு நானும், எனது சகோதர,

சகோதரிகளும் சீர்திருத்த ஆவணம் ஏற்படுத்தினோம் என்றால் மேற்படி சீர்திருத்த ஆவணம் வீடு தொடர்புடையது மட்டுமே. தற்போது வா.சா.ஆ.7 ஆவணத்தை காண்பித்து சீர்திருத்த பத்திரத்தில் தபசில் வயலை பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது என்று கேட்டதற்கு ஆமாம் குறிப்பிடப்பட்டுள்ளது என கூறினார். அதே வா.சா.ஆ.5 ஆவணத்தில் சர்வே எண்.113/9 என்பதினை 113/8 என்று சீர்திருத்தம் செய்துகொண்டோம் என்றால் சரியல்ல. 2011–12ம் ஆண்டு வழக்கு தபசில்சொத்துக்களை பொறுத்து 2ம் பிரதிவாதி, வாதிக்கு விற்பனை செய்துவிட்டதால் சீர்திருத்த ஆவணத்தில் திருத்தம் செய்வதற்கு அதிகாரம் இல்லை என்றால் சரிதான்.

வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி மற்றொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

ஒம்/–K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி.